# DIOCESAN CIRCULAR LETTERS

**No. C- 04/2019** **20.02.2019**

## அகில உலகப் பெண்கள் நாள்
## மார்ச் - 8

இயேசுவில் அன்பான சகோதரிகளே! சகோதரர்களே!

"வாழ்வு பெறும் பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன்" (யோவா 10:10) என்ற நம் ஆண்டவர் இயேசுவின் அருளும் ஆற்றலும் அனைவரோடும் இருப்பதாக!

மார்ச் 8ஆம் நாள் அகில உலகப் பெண்கள் நாளாக உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. திருஅவையும் அந்நாளின் முக்கியத்தை உணர்ந்து அந்நாளைச் சிறப்பிக்கிறது. இவ்வாண்டு, எதிர்வரும் ஞாயிறாகிய மார்ச் 10ஆம் நாளை நமது மறைமாவட்டத்தில் திருவழிபாட்டுடன் இணைத்து ஆலயங்களில் நாம் சிறப்பிக்கிறோம். மார்ச் 8ஆம் தியதியாகிய அதே நாளைச் சிறப்பிப்பது நல்லதெனச் சில பங்குகளில் உணர்ந்தால் அதுவும் நன்றே.

தனது இறையாட்சிப் பணியில் பெண்களின் பங்கேற்பை ஆண்களுக்குச் சமமாக இணைத்துக் கொண்டார் இயேசு என நற்செய்தியிலிருந்து நாம் அறிகிறோம் (லூக் 8:1-3). கிணற்றடியில் சந்தித்த சமாரியப் பெண்ணைத் தனது கனிவான உரையாடல் மூலம் ஆற்றல்படுத்தி அப்பெண் வாழ்ந்த அந்த ஊர் மக்கள் மத்தியில் நற்செய்தி அறிவிப்பாளராக மாற்றினார் இயேசு (யோவா 4:27-30). 'இவள் ஒரு பாவி, இவள் கொல்லப்பட வேண்டும்' எனக் கூச்சலிட்ட ஆண்கள் மத்தியில், விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணை மன்னித்து அவரின் மாண்பைக் காக்கத் தவறவில்லை இயேசு (யோவா 8:11). தனது உயிர்ப்பின் உன்னதச் செய்தியை ஒரு பெண்ணின் வழியாகவே உலகிற்கு அறியச்செய்தார் இயேசு (யோவா 20:17-18). இயேசுவின் சீடர்களாகிய நாமும் திருஅவையிலும் சமூகத்திலும் அவரது இத்தகைய ஆண்-பெண் சமத்துவ மனநிலையைக் கொண்டு செயலாற்ற வேண்டும்.

வாழ்வுரிமையும் பெண்களும்

'வாழ்வுரிமையும் பெண்களும்' என்ற மையப்பொருளில் குமரிமாவட்டப் பெண்கள் கூட்டமைப்பு இவ்வாண்டு மார்ச் எட்டாம் நாளைச் சிறப்பிக்கிறது. நமது மறைமாவட்டப் பெண்கள்